படுவதோடு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முறையில் மேலும் கொள்கை முடிவுகளும் உருவாக்கப்படல் வேண்டும். அத்துடன் நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் இடையில் நிலவும் இலாபநோக்கொட்டிய முரண்பட்ட நோக்கும் குறைக்கப்படல்வேண்டும். தனியுரிமை அதிகாரங்களும், பயன்தராத கட்டுப்பாடுகளும் நீக்கப்படவேண்டும். வளர்ச்சிக்கும் பங்கீட்டுக்குமிடையிலான ஏற்கத்தக்க சமநிலை ஒன்று உருவாக்கப்படல்வேண்டும். 1978 இன் பொருளாதாரத்தின் செயலாற்றம். உரிய கொள்கைச் சூழ்நிலையில் நடைமுறைப்படுத்தப்படின் தன்னில் தங்கியிருக்கும் பொருளாதார அபிவிருத்தியின் வழியில் செல்லும் ஆற்றல் எமக்குண்டு என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

## தேசிய உற்பத்தியும் வருமானமும்

1978இன் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியானது ரூ. 361,390 இலட்சம் என தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டிலும் பார்க்க 23,5 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. விலை அதிகரிப்பிற்கு இடம்விடின் நிலையான (1959) விலைகளில் மொத்தத் தேசியஉற்பத்தியானது ரூ, 130,020 இலட்சம் என 1978 இல் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 8·2 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. ஒப்புநோக்குகையில் 1977 இல் இதன் அதிகரிப்பு 4·4 சதவீதமாக விளங்கியது. 1978 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது கடந்த பத்தாண்டுகளின் சராசரி வீத வளர்ச்சியிலும் பார்க்க இரட்டிப்பிற்கு மேலாக இருந்தது. அத்துடன் அண்மைய ஆண்டுகளில் அடைந்த ஆகக்கூடிய வளர்ச்சிக்கு ஏறக்குறைய சமமாக இருந்தது. அதாவது 1968 இன் 8·4 சதவீத கொண்ட வளர்ச்சிக்கு இணையாக இருந்தது. சென்ற சில ஆண்டுகளில் சிலதுறைகளில் மட்டும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கையில் பொருளாதாரத்தின் ஏனைய துறை தேக்க நிலையில் அல்லது வீழ்ச்சியுற்ற நிலையில் இருக்க முற்றிலும் மாறுபட்டமுறையில் எல்லாத் துறைகளிலும் உயர்மட்ட தொழிற்பாடு நடவடிக்கை 1978 இல் இருந்தது. சுரங்கத்தொழில், பார்க்குழித்தொழில் கட்டடவாக்கம், மின்வலு, நிதி, தயாரிப்பு வர்த்தகம் ஆகிய தொழில்களில் மிகக் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது.

1978 இன் நடுப்பகுதியில்இலங்கையின் மக்கள் தொகை 142 இலட்சம் என தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1.7 சதவீதம் கொண்ட ஆண்டதிகரிப்பினை எடுத்துக்காட்டுகின்றது. எனவே உண்மைநியதிகளின்படி தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 917 ஆக விளங்கி 6·4 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டுகின்றது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 2.6 சதவீதமாக விளங்கியது.

இலங்கையின் வர்த்தக மாற்றுவீதம் 76 இலும் 77 இலும் முறையே 35 சதவீதத்தாலும் 31 சதவீதத்தாலும் முன்னேறியது. ஏற்றுமதி விலைகளில் மிகப் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதே இவ்விளைவுக்கு முக்கிய காரணமாகும். எனினும்இந்நிலை 1978இல் மிகச் சிறியளவால் வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக வர்த்தக மாற்று விகித்தில் செய்யப்படும் மாற்றங்களால் உண்மை மொத்தத் தேசிய உற்பத்தி சீராக்கஞ் செய்யப்பட்டு பெறப்பட்ட உண்மைத்தேசிய வருவாய் 1978 இல் 7.8 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. இது உண்மையான தேசிய உற்பத்தியின் வளர்ச்சியிலும் பார்க்க மிகச் சிறிதளவால் குறைந்ததாகும்.

நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 388,260 இலட்சம் என 1978 இல் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1977 இலும் பார்க்க 25 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். நுகர்வுச்செலவு 29 சதவீதத்தால் அதிகரிக்க மொத்த உள்நாட்டு மூலதன அமைப்பு 65 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தது. தனியாரினதும் அரசினதும் நுகர்வு, தனித்தனியே 29 சதவீதத்தால் ஒரே அளவால் அதிகரிக்க மூலதன ஆக்கத்தின் பெரும் அதிகரிப்பிற்கு அரசதுறை வகைகூறியது. எனினும் இவ்வெண் தொகைகளுக்கு தயக்கத்தோடேயே விளக்கம் கொடுக்கவேண்டும். காரணம் 1978 இல் ஏற்பட்ட விலைமாற்றங்களையும் அவை உள்ளடக்கியிருக்கின்றன. சிறப்பாக இலங்கை ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட உயர்ந்த இறக்குமதிச் செலவுகளை எண்ணுகையில் இந்நிலை தவிர்க்கமுடியாததாகும்,

**துறைவகைப்படியான அபிவிருத்திகள்**

1959 இன் அடிப்படையாண்டிற்குத் தொடர்பான கடந்த ஐந்தாண்டுகளின் உண்மைத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான பகுப்பாய்வு (1959 இன் நிலையான விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி) அட்டவணை 1.2 இல் காட்டப்பட்டுள்ளது.

1977 இற்கும் 1978 க்கும் இடையில் மொத்தத் தேசிய உற்பத்தியின் பல்வேறு துறைகளின் பங்குகளில் மிகச்சிறிதளவு மாற்றங்களே ஏற்பட்டுள்ளன. இவை 1978 இன் வெளியீட்டில் ஏறக்குறைய எல்லாத்துறைகளிலும் இலாபங்களைப் பதிவு செய்ததை எடுத்துக்காட்டுகின்றன. வேளாண்மைத் துறையின் பங்கு 32 சதவீதத்திலிருந்து 31 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றதும் கட்டடவாக்கத்துறையின் வளர்ச்சி 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு வளர்ச்சியுற்றதும் குறிப்பிடத்தக்க பண்பாகும். வேளாண்மைப்பங்கின் மிகச்சிறியளவு வீழ்ச்சிக்கு தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சியும் பல ஏனைய துறைகளின் விரைந்த வளர்ச்சியுமே முதன்மைக்காரணமாகும். கட்டடவாக்கத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டதற்கு கட்டடப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்கப் பெற்றமையால் அதிகரித்த தொழிற்பாடுகள் ஏற்பட்டமையே காரணமாகும்.

இருபதுஆண்டுகள் கொண்ட காலப்பிரிவின் உள்ளடக்கம் 1959 ஆம் ஆண்டுடன் 1978 இன் தேசிய உற்பத்தியின் துறைவகை உள்ளடக்கத்தை ஒப்புநோக்கின் வேளாண்மைத்துறையின் பங்கு 39 சதவீதத்திலிருந்து 31 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றிருக்கையில் கைத்தொழில்துறை 12 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு உயர்வுற்றமை குறிப்பிடத்தக்க பண்பாகும். தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஏற்றுமதிக் கைத்தொழில் நீங்கலாகக் கைத்தொழிலின் பங்கு 1959 இல் 12 சதவீதத்திலிருந்து 1978 இல் 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. நிலையான பெறுமதி அடிப்படையில் வேளாண்மை 73 சதவீதத்தால் வளர்ச்சியுற்றிருக்க மிகக்குறைந்த மட்டத்திலிருந்து உருவான கைத்தொழில் 139 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. இது கைத்தொழிலின் வளர்ச்சி வேளாண்மையிலும் பார்க்க ஓரளவு விரைவான வளர்ச்சியைக் கொண்டிருந்த போதும் தேசிய உற்பத்தியில் முக்கியமான பங்காகக் கருதப்படுமளவிற்குக் கைத்தொழில் வளரவில்லை என்பதற்கு தெளிவான சான்று உண்டு. கடந்த 20 ஆண்டுகளாக கைத்தொழில் வளர்ச்சி மெதுவாக இருந்தமைக்குபேணப்பட்டு வந்த கைத்

# அட்டவணை 1.1 தேசிய உற்பத்தி, வருமானம், செலவு குடித்தொகை 1959 – 1978

| ஆண்டு | நடைமுறை காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. | | நடைமுறைச் சந்தை விலைகளில் மொ. தே. செ. | | நிலையான (1959) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. | | நிலையான (1959) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. | | உண்மையான தேசிய வருமானம் | | நடு ஆண்டின் குடித்தொகை | | தலைக்குரிய மொ. தே. உ. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | வளர்ச்சி வீதம்% | தொகை ப. இ. ரூ. | வளர்ச்சி வீதம்% | தொகை ப. இ. ரூ. | வளர்ச்சி வீதம்% | தொகை ப. இ. ரூ. | வளர்ச்சி வீதம்% | தொகை ப. இ. ரூ. | வளர்ச்சி வீதம்% | தொகை 1000 | வளர்ச்சி வீதம்% | தொகை ரூபாய்கள் | வளர்ச்சி வீதம்% |
| 1959 | 5,893 | — | 6,433 | — | 5,930 | — | 5,893 | — | 5,893 | — | 9,625 | — | 612 | — |
| 1960 | 6,287 | 6.7 | 6,667 | 3.6 | 6,332 | 6.8 | 6,289 | 6.7 | 6,278 | 6.5 | 9,896 | 2.8 | 635 | 3.8 |
| 1961 | 6,313 | 0.4 | 6,835 | 2.5 | 6,465 | 2.1 | 6,425 | 2.2 | 6,274 | -0.1 | 10,168 | 2.7 | 632 | -0.5 |
| 1962 | 6,503 | 3.0 | 6,923 | 1.3 | 6,760 | 4.6 | 6,710 | 4.4 | 6,628 | 5.6 | 10,443 | 2.7 | 643 | 1.7 |
| 1963 | 6,797 | 4.5 | 7,329 | 5.9 | 6,951 | 2.8 | 6,900 | 2.8 | 6.658 | 0.5 | 10,646 | 1.9 | 648 | 0.8 |
| 1964 | 7,291 | 7.3 | 7,758 | 5.9 | 7,397 | 6.4 | 7,363 | 6.7 | 7,048 | 5.9 | 10,903 | 2.4 | 675 | 4.2 |
| 1965 | 7,484 | 2.6 | 8,069 | 4.0 | 7,565 | 2.3 | 7,551 | 2.6 | 7,242 | 2.8 | 11,164 | 2.4 | 676 | — |
| 1966 | 7,705 | 3.0 | 8,301 | 2.9 | 7,854 | 3.8 | 7,818 | 3.5 | 7,313 | 1.0 | 11,440 | 2.5 | 683 | 1.0 |
| 1967 | 8,265 | 7.3 | 8,984 | 8.2 | 8,255 | 5.1 | 8,210 | 5.0 | 7,543 | 3.1 | 11,703 | 2.3 | 702 | 3.8 |
| 1968 | 9,876 | 19.5 | 10,664 | 18.7 | 8,937 | 8.3 | 8,901 | 8.4 | 8,117 | 7.6 | 11,992 | 2.5 | 742 | 5.7 |
| 1969 | 10,725 | 8.6 | 11,586 | 8.6 | 9,369 | 4.8 | 9,301 | 4.5 | 8,487 | 4.6 | 12,252 | 2.2 | 759 | 2.3 |
| 1970 | 11.636 | 8.5 | 12,640 | 9.1 | 9,828 | 4.9 | 9,743 | 4.8 | 8,828 | 4.0 | 12,514 | 2.1 | 779 | 2.0 |
| 1971 | 11,860 | 1.9 | 12,587 | -0.4 | 9,836 | ... | 9,769 | 0.3 | 8,814 | 0.2 | 12,699 | 1.5 | 769 | -1.0 |
| 1972 | 12,710 | 7.2 | 18,497 | 7.2 | 10,146 | 3.2 | 10,085 | 3.2 | 9,115 | 3.4 | 12,951 | 2.0 | 779 | 1.2 |
| 1973 | 15,274 | 20.2 | 16,630 | 23.2 | 10,514 | 3.6 | 10,470 | 3.8 | 9,300 | 2.0 | 13,091 | 1.1 | 800 | 2.7 |
| 1974 | 19,858 | 30.0 | 21,469 | 29.1 | 10,892 | 3.6 | 10,867 | 3.8 | 9,724 | 4.6 | 13,284 | 1.5 | 818 | 2.3 |
| 1975 | 22,067 | 11.1 | 23,934 | 11.5 | 11,194 | 2.8 | 11,167 | 2.8 | 9,798 | 0.8 | 13,514 | 1.7 | 826 | 1.0 |
| 1976* | 24,215 | 9.7 | 26,204 | 9.5 | 12,542 | 3.1 | 11,506 | 3.0 | 10,199 | 4.0 | 13,730 | 1.6 | 838 | 1.4 |
| 1977* | 29,271 | 20.9 | 31,061 | 18.5 | 12,042 | 4.3 | 12,016 | 4.4 | 11,127 | 9.1 | 13,971 | 1.7 | 860 | 2.6 |
| 1978* | 36,139 | 23.5 | 38,668 | 24.5 | 13,043 | 8.3 | 13,002 | 8.2 | 11,943 | 7.3 | 14,184 | 1.7 | 917 | 6.4 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## நிலையான (1959) காரணிச் செலவுவிலைகளில், மொத்த, தேசிய

| துறைகள் | 1959 | | 1974 | |
|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப.இ. ரூ. | சத வீதம் |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில் வேட்டையாடல், கடற்றொழில் ... | 2,302 | 39.1 | 3,582 | 32.9 |
| 1. 1. வேளாண்மை ... | 2,148 | 36.5 | 3,328 | 30.6 |
| 1.1.1. தேயிலை ... | (642) | (10.9) | (699) | (6.4) |
| 1.1.2. இறப்பர் ... | (183) | (3.1) | (259) | (2.4) |
| 1.1.3. தெங்கு ... | (404) | (6.9) | (387) | (3.6) |
| 1.1.4. நெல் ... | (312) | (5.3) | (656) | (6.0) |
| 1.1.5. ஏனையவை ... | (453) | (7.7) | (1,327) | (12.2) |
| 1.2. காட்டுத்தொழில் ... | 93 | 1.6 | 120 | 1.1 |
| 1.3. கடற்றொழில் ... | 61 | 1.0 | 134 | 1.2 |
| 2. சுரங்கத்தொழிலும், பார்குழித்தொழிலும் ... | 31 | 0.5 | 191 | 1.7 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 682 | 11.6 | 1,420 | 13.1 |
| 3.1. ஏற்றுமதி உற்பத்தி .. | 373 | 6.3 | 546 | 5·0 |
| 3.2. தொழிலக கைத்தொழில் ... | 263 | 4.5 | 770 | 7.1 |
| 3.3. சிறு கைத்தொழில் ... | 46 | 7.8 | 104 | 1.0 |
| 4. கட்டடவாக்கம் ... | 283 | 4.8 | 553 | 5.1 |
| 5. மின்வலு, வளி, நீர் நலத்துறைப் பணிகள் ... | 9 | 0.1 | 84 | 0.8 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் தொடர்பூட்டல் | 541 | 9.2 | 1,054 | 9.7 |
| 7. மொத்த சில்லறை வர்த்தகம் ... | 801 | 13.6 | 1,450 | 13.3 |
| 7.1. இறக்குமதிகள் ... | 139 | 2.3 | 161 | 1.5 |
| 7.2. ஏற்றுமதிகள் ... | 104 | 1.8 | 123 | 1.1 |
| 7.3. உள்நாட்டு ... | 558 | 9.5 | 1,166 | 10.7 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச்சொத்து... | 51 | 0.9 | 166 | 1.5 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 201 | 3.4 | 344 | 3.2 |
| 10. பொது நிருவாகமும், பாதுகாப்பும் ... | 301 | 5.1 | 609 | 5.6 |
| 11. பணிகள் வே. எ. உ. ... | 728 | 12.3 | 1,441 | 13.3 |
| 2 மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 5,930 | 100.6 | 10,892 | 100.2 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | – 37 | -0.6 | – 25 | -0.2 |
| 14. மொத்த தேசிய உற்பத்தி ... | 5,893 | 100.0 | 10,867 | 100.0 |

Central Bank of Sri Lanka
22653
10 JUN 2009
Library & Information Centre
Communications Department



## உற்பத்தியின் துறைவகைப்படியான உள்ளடக்கம்

| 1975 | | 1976 | | 1977 | | 1978 | | 1977க்கு மேலாக 1978இல் சதவீத அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | |
| 3,596 | 32.2 | 3,568 | 31.0 | 3,828 | 31.9 | 3,990 | 30.7 | 4.2 |
| 3‘352 | 30.0 | 3,308 | 28.8 | 3,568 | 29.7 | 3,690 | 28.4 | 3.4 |
| (733) | (6.6) | (674) | (5.9) | (715) | (6.0) | (682) | (5.2) | (-4.6) |
| (295) | (2.6) | (299) | (2.6) | (296) | (2.5) | (315) | (2.4) | (6.4) |
| (419) | (3.7) | (365) | (3.2) | (332) | (2.7) | (385) | (3.0) | (16.0) |
| (479) | (4.3) | (513) | (4.4) | (687) | (5.7) | (775) | (6.0) | (12·8) |
| (1,426) | (12.8) | (1.457) | (12.7) | (1,538) | (12.8) | (1,533) | (11.8) | (-0.3) |
| 1 4 | 1.0 | 120 | 1.0 | 112 | 0.9 | 133 | 1.0 | 18.8 |
| 137 | 1.2 | 140 | 1.2 | 148 | 1.2 | 167 | 1.3 | 12.8 |
| 248 | 2.2 | 354 | 3.1 | 311 | 2.6 | 411 | 3.2 | 32.2 |
| 1,462 | 13.1 | 1,489 | 12.9 | 1,505 | 12.5 | 1,632 | 12.6 | 8.4 |
| 460 | 4.1 | 432 | 3.7 | 435 | 3.6 | 446 | 3.4 | 2.5 |
| 832 | 7.4 | 871 | 7.6 | 881 | 7.3 | 987 | 7.6 | 12.0 |
| 171 | 1.5 | 185 | 1.6 | 189 | 1.6 | 200 | 1.5 | 5.8 |
| 503 | 4.5 | 531 | 4.6 | 480 | 4.0 | 629 | 4.8 | 31.6 |
| 91 | 0.8 | 99 | 0.9 | 102 | 0.8 | 123 | 0.9 | 20.6 |
| 1,100 | 9.8 | 1,143 | 9.9 | 1,198 | 10.0 | 1,285 | 9.9 | 7.3 |
| 1,501 | 13.4 | 1,545 | 13.4 | 1,623 | 13.5 | 1,780 | 13.6 | 9.7 |
| 125 | 1.1 | 146 | 1.3 | 147 | 1.2 | 261 | 2.0 | 77.5 |
| 171 | 1.5 | 126 | 1.1 | 243 | 2.0 | 277 | 2.1 | 14.0 |
| 1,205 | 10.8 | 1,273 | 11.0 | 1,233 | 10.3 | 1,242 | 9.5 | 0.7 |
| 184 | 1.6 | 191 | 1.7 | 229 | 1.9 | 263 | 2.0 | 14.8 |
| 350 | 3.1 | 353 | 3.1 | 360 | 3.0 | 374 | 2.9 | 3.9 |
| 646 | 5.8 | 676 | 5.9 | 703 | 5.8 | 760 | 5.8 | 8.1 |
| 1,513 | 13.5 | 1,593 | 13.8 | 1,704 | 14.2 | 1,797 | 13.8 | 5 5 |
| 11,194 | 100.2 | 11,543 | 100.3 | 12,042 | 100.2 | 13,043 | 100.3 | 8.3 |
| -27 | -0.2 | -37 | -0.3 | -25 | -0.2 | -4.1 | -0.3 | — |
| 11,167 | 100.0 | 11,506 | 100.0 | 12,016 | 100.0 | 13,001.9 | 100.0 | 8.2 |

தொழில் இறக்குமதிப் பதிலீட்டுத்தன்மையின் அளவு உயர்ந்திருந்ததினுல் கூட்டப்பட்ட பெறுமதி குறைந்திருந்தமையும், கடும் கட்டுப்பாடுகளும், இக் காலப்பிரிவின் பெரும்பகுதியில் இக்கைத்தொழிலிற்கு எல்லைகடந்த பெரும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டமையும் காரணங்களாக விளங்குகின்றன. வேளாண்மைத்துறையின் பங்கு வீழ்ச்சியுற்றமை நீங்கலாகவும் சுரங்கத் தொழில், பார்க்குழித்தொழில், மின்வலு, நிதி மற்றும் ஏனைய பணிகள் ஆகிய சிறுதுறைகளில் சில முன்னேற்றங்கள் இருந்ததெனினும் இக்காலப் பிரிவில் பொருளாதாரத்தின் அமைப்பு சில மாற்றத்திற்குத்தான் உள்ளா கியது போல் தோன்றுகிறது.

வேளாண்மைத்துறையின் வெளியீடு (வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ஆகியவற்றை உள்ளடக்கி) 1978 இல் 4 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சி 7·3 சதவீதமாகும். பெருந்தோட்டத்துறை வேளாண்மை (தேயிலை, இறப்பர், தெங்கு) தேயிலையில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும் இறப்பரிலும், தெங்கிலும் ஏற்பட்ட அதிகரிப்பினுல் 3 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. உள் நாட்டுவேளாண்மையைப்பொறுத்தவரையில் சார்பான பருவகாலநிலையினுலும் உயர்ந்த விலைகளினுலும் நெல்லின் உற்பத்தி 13 சதவீதத்தால் உயர்வுற்றது. ஆனுல் இத்துறையின் ஏனையவற்றின் செயலாற்றம் சமநிலையற்ற தன் மையை எடுத்துக்காட்டுகின்றது. துணை உணவுப்பயிர்களின் உற்பத்தி 1977 இன் மட்டத்திலேயே இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மிளகாய் வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற முக்கிய பயிர்களின் உற்பத்தி 1978 இல் வீழ்ச்சியுற்றது. மறுபுறம் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் முன்னேற்றம் இருந்தது. கடற்றொழில், கைத்தொழில் என் பன 13 சதவீத முன்னேற்றத்தைக் காட்டுகையில் கால்நடைத்துறை ஓர் பின்னடைவை அடைந்தது, போல் தோன்றுகிறது. பொதுவாகப் பார்க் கையில் 1978 இல் உள்நாட்டு வேளாண்மையின் செயலாற்றம் சமநிலையற்ற தன்மையிலேயே விளங்கியது.

1978 இல் சுரங்கப்பார்குழித்தொழிலானது குறிப்பிடத்தக்களவு வளர்ச் சியுள்ள பிரிவாக விளங்கியதுடன், 1978 இல் சேர்க்கப்பட்ட அதன் பெறுமதி யானது 1977 இலும் பார்க்க மூன்றிலொரு பங்கால் உயர்வாக இருந்தது, அண்மைக்காலத்தில் இப்பிரிவின் வளர்ச்சி இரத்தினக்கல் கைத்தொழில் விரிவாக்கத்தினுல் ஏற்பட்டதாகும். இக் கைத்தொழில் ஒரு காலத்தில் இலங்கைத் தீவில் ஒரு பகுதியினைக்கொண்டிருந்தாலும் பிற்பட்டகாலத்தில் பல புதிய பகுதிகளுக்கு விரிவாக்கப்பட்டதுடன் பலருக்குப் பயனுடைய வேலைவாய்ப்பை வழங்கியது. எனிதும் 1978 இல் இரத்தினக்கல் ஏற்றுமதியில் வீழச்சி ஏற்பட்டுள்ளதாகச் சுங்கப் பதிவுகள் காட்டுகின்றது இரத்தினக்கல் ஏற்றுமதிப் பதிவுகள் மூலம் அளக்கப்பட்ட இக் கைத்தொழிலின் உற்பத்தி யானது 1978 இல் வீழ்ச்சியைக்காட்டியது. எனவே 1978 இல் இப்பிரிவின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு, செங்கட்டி ஓட்டுக் கைத்தொழில், பார்குழித்தொழில், ஆகிய துறைகளில் ஏற்பட்ட விரைவான விரிவாக்கத் திலிருந்து பெருமளவு பெறப்பட்டதனுலேயாகும். கட்டடவாக்க செழிப் பின் தேவைக்கேற்பவே இவ் விரிவாக்கம் ஏற்பட்டது.

1978 இல் கைத்தொழில் பிரிவின் உற்பத்தியானது 9 சதவீத அதிகரிப் பைக் கொண்டிருந்ததாக மதிப்பிடப்பட்டது. பெருந்தோட்டப்பயிர்களின்

பதனிடல் 2 சதவீதத்தால் அதிகரித்து இத்துறையின்போக்கினை பிரதிபலிக்கின்றது. மறுபுறத்தில் தொழிற்சாலைத் தொழில் 1978 இல் 11 சதவீதத்தால் வளர்ச்சியுற்றிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டு மிகச்சிறிய 1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 1977 நவெம்பரில் இறக்குமதி தாராளமாக்கப்பட்டதை அடுத்து மூலப்பொருட்களும் உதிரிப் பாகங்களும்பெருமளவு கிடைக்கத்தக்கதாக இருந்தமையால் 1978இல் உயர்ந்த இயலளவு பயன்பாட்டு அடிப்படையில் கைத்தொழில் இயங்கத்துணை செய்தது. 1978 இல் தனியார்பிரிவு கைத்தொழில் கிட்டத்தட்ட 14 சதவீதத்தால் வளர்ச்சியுற்ற வேளையில் அரச கைத்தொழில்களின் உற்பத்தி 1977 இல் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து, 1978 இல் 10 சதவீதத்தால் உயர்ச்சியடைந்தது. 1978 இல் சிறு கைத்தொழில்களின் உற்பத்தி கிட்டத்தட்ட 6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. சிறு கைத்தொழில்களில் சிறப்பாக சிறிய கைத்தறிபுடவைக் கைத்தொழில் மலிவானதும் தரம் கூடியதுமான இறக்குமதிகளோடு ஈடுசெய்ய முடியாமையால் பல இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டி இருந்தது. எனினும் ஏனைய குடிசைக் கைத்தொழில்களில் முக்கியமாக சுற்றுலாக் கைத்தொழில்களுடன் தொடர்பு உள்ளவை கணிசமான முன்னேற்றத்தைக் காட்டின.

சுரங்கப் பார்க்குழித் தொழிலை அடுத்து 1978 இல் வலுவாக இயங்கிய துறை கட்டட ஆக்கத்துறையாகும். இத்துறையில் ஏற்பட்ட 31 சதவீதம் கொண்ட மதிப்பிடப்பட்ட வளர்ச்சிக்கு இவ்வாண்டில் பெருமளவு கட்டடப் பொருட்கள் எளிதாகக் கிடைத்தமையே காரணமாகும். சீமெந்து விற்பனைகள் 1978 இல் 65 சதவீதத்தால் பெருமளவு அதிகரித்தது. அதே வேளையில் இரும்பு, உருக்கு, கல்நார்த்தட்டு, மற்றும் ஏனைய கட்டடப் பொருட்கள் பெருமளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தன. தற்காலிக மதிப்பீடுகளின்படி தெருக்கள், பாலங்கள், நீர்பாசன வேலைகள் மற்றும் உள்வீட்டு அமைப்புகள் கொண்ட அரசதுறை கட்டிடவாக்க வேலைகள் 16 சதவீதத்தால் வளர்ச்சியுற தனியார்துறைக் கட்டடவாக்கம், சிறப்பாக வதியும் வீடுகள் புதிய கைத்தொழில் ஆகியவை கணிசமான அளவு அதிகரித்தன.

வேளாண்மை, கைத்தொழில், சுரங்கத்தொழில், கட்டட ஆக்கத்தொழில் என்பனவற்றின் வளர்ச்சி, வர்த்தகம், போக்குவரத்து மற்றும் ஏனைய பணிகளில் தவிர்க்க முடியாத தாக்கங்களை கொண்டிருந்தன. 1978 இல் போக்குவரத்து துறையில் ஏற்பட்ட 7 சதவீத வளர்ச்சி மரபுவழியாக ஏற்றுக்கொண்ட மதிப்பீடாகும். இறக்குமதியில் தாராள தன்மை காரணமாக 1978 இல் வான்கள், சுமை வண்டிகள் என்பவற்றின் இறக்குமதி ஏறக்குறைய ஐந்துமடங்கானதுடன் கூடிய போட்டித் தன்மைக்கும் குறைந்த போக்குவரத்துக் கட்டணம் குறைப்பின் போக்கிற்கும் வழியமைத்தது. எனினும், போக்குவரத்து இயலளவின் இந்தப் பெரிய அதிகரிப்பின் முழுத்தாக்கமும் எதிர்வரும் ஆண்டுகளில்தான் தெரியவரும். இறக்குமதி தாராள தன்மை 1978 இல் மொத்த, சில்லறை வர்த்தகத்தில் 10 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் வர்த்தகம் கணிசமான அளவால் உயர்ந்தது. வங்கித் தொழிலிலும் நிதித்துறையிலும் கூட்டப்பட்ட பெறுமதி 15 சதவீதத்தால் அதிகரித்தது. பொருளாதாரத்தின் உயர்மட்ட நடவடிக்கைக்கேற்ப இது அமைந்திருக்கின்றது. உணவகங்கள், உணவுச்சாலைகள் என்பவற்றை உள்ளடக்கும் ஏனைய பணிகளின் வெளியீடு 6 சதவீதத்தால் அதிகரித்தது.

**மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்**

1978 இல் இலங்கையின் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய மொத்த மூலவளங்கள் ரூ. 539,000 இலட்சங்களென மதிப்பிடப்பட்டதுடன் இது 1977 இலும் பார்க்க 43 சதவீத அதிகரிப்பையும் கொண்டுள்ளது. இது ரூ. 385,500 இலட்சம்கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியினையும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் பணிகளையும்கொண்ட ரூ 153,500 இலட்சங்களையும் உள்ளடக்குகின்றது. இந்த ஆண்டில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களை இவ்வெண்கள் உள்ளடக்குவதனால் பின்வரும் அட்டவணையில் குறைக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 1.3

### மூலவளங்களின் உள்ளடக்கமும் பயன்பாடும் 1977 - 78

| பிரிவு | 1977 | | 1978 | | 1977 | | 1977/78 அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 7,860 | 100 | 53,900 | 100 | 42,197 | 100 | 11.5 |
| 1.1 மொத்த சந்தை விலைகள் ... | 31,352 | 83 | 38,850 | 72 | 33,954 | 80 | 8.3 |
| 1.2 பொருட்களினதும் காரணிகளல்லாத பணிகளினதும் இறக்குமதிகள் ... | 6,508 | 17 | 15,350 | 28 | 8,243 | 20 | 26.7 |
| 2. பயன்பாடு ... | 37,860 | 100 | 53,900 | 100 | 42,197 | 100 | 11.5 |
| 2.1 நுகர்வு ... | 25,306 | 67 | 32,381 | 60 | 28,084 | 66 | 11.0 |
| 2.2 மொத்த உள்நாட்டு மூலதன அமைப்பு ... | 5,035 | 14 | 8,280 | 15 | 6,233 | 15 | 23.8 |
| (அ) அரசு ... | (1,542) | ( 4 ) | (3,077) | ( 6 ) | (2,049) | ( 6 ) | (32.8) |
| (ஆ) பொதுக்கூட்டுத் தாபனங்கள் | (861) | ( 3 ) | (1,815) | ( 3 ) | (1,066) | ( 3 ) | (23.8) |
| (இ) தனியார் துறை | (2,632) | ( 7 ) | (3,388) | ( 6 ) | (3,158) | ( 6 ) | (20.0) |
| 2.3 இருப்புக்கள் ... | 159 | ... | 33 | ... | 27 | ... | — |
| 2.4 பொருட்களினதும் காரணிகளல்லாத பணிகளினதும் ஏற்றுமதி ... | 7,360 | (19) | 13,207 | ( 25 ) | 7,853 | (18) | 6.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1978இல் உண்மைநியதிகளில் மூலவளக்கிடைப்பனவு 12சதவீதத்தால் உயர் வடைந்தது. மொத்த மூலவளத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு 83 சவீதத்திலிருந்து 80 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைய இறக்குமதி 17 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. வர்த்தகத்தை தாராளமாக்கியமையே இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு காரண மாகும்.

சென்ற ஆண்டுபோல் மூலவளங்களின் பயன்பாட்டில் நுகர்வின் பங்கு 1978 இல் மிகச்சிறிதளவால் 67 இல் இருந்து 66 சதத்திற்கு வீழ்ச்சியுற்றது. எனினும் உண்மை நியதிகளின்படி நுகர்வில் 11 சதவீத அதிகரிப்பை இது பிரதிபலிக்கிறது. மறுபுறம் சென்ற ஆண்டில் அதிகரித்த ஏற்றுமதியின் பங்கு 19 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. மொத்த உள் நாட்டு மூலதன அமைப்பு வரவேற்கத்தக்க முறையில் 24 சதவீதத்தால் உயர்ந்தது. அத்துடன் மொத்த மூலவள பயன்பாட்டில் இதன்பங்கு 14 சத வீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்ந்தது. அரசின் முதலீடு 33 சதவீதத் திற்கு உயர்ந்தது. அதே வேளையில் அரச கூட்டுத்தாபனங்களினதும் தனி யார்துறையினதும் முதலீடு முறையே 24 சதவீதத்தாலும், 20 சதவீதத்தாலும் உயர்வுற்றது.

பொருளாதாரத்தின் உள்நாட்டு சேமிப்புக்களை முதலீடுகளிலிருந்து (மொத்த நிலையான மூலதன ஆக்கங்களும் கணிப்பீட்டு மாற்றங்களும்) வெளி நாட்டு மூலவளங்களை (அதாவது பொருட்களினதும் காரணியற்ற பணிகளி னதும் தேறிய இறக்குமதிகள்) கழிக்க வருவது என மதிப்பீடுசெய்யப்பட முடியும்.

அட்டவணை 1.4

## உள்நாட்டு சேமிப்புகள்

| பிரிவு | 1974* | 1975* | 1976* | 1977* | 1978 |
|---|---|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொ. உ. உ. ... | 21,701 | 24,183 | 26,443 | 31,352 | 38,392 |
| 2. வெளிநாட்டு மூலவளங்கள் (பொருட்களினதும் காரணியற்ற பணிகளினதும் தேறிய இறக்குமதிகள்) | 1,040 | 1,203 | 427 | - 852 | 1,867 |
| 3. முதலீடு ... | 3,139 | 3,909 | 4,193 | 5,194 | 8,313 |
| 4. உள்நாட்டு சேமிப்புகள் (3-2) ... | 2,099 | 2,706 | 3,766 | 6,046 | 6,446 |
| 5. சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 4) ... | 9.7 | 11.2 | 14.2 | 19.3 | 16.8 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (சந்தை விலைகளில்) 1978 இல் 22 சத வீதத்தால் அதிகரித்த வேளையிலும், உள்நாட்டு சேமிப்புகள் மேலே அள விடப்பட்டதற்கு அமைய 7 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. முதலீடு ரூ. 29,610 இலட்சங்களால் அல்லது 57 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. ஆனால் மொத்தத்தில் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு பொருட் களினதும், பணிகளினதும் இறக்குமதியின் தேறிய மாற்றமாகிய ரூ. 27,190 இலட்சங்களைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக உள்நாட்டு சேமிப்புக்கள் ரூ. 4,000 இலட்சங்களால் உயர்ந்ததுடன் 1978இல் சேமிப்பு விகிதம் உள் நாட்டு உற்பத்தியின் 17 சதவீதமாக உயர்ந்தது.